
தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**திருச்சியில் 105 டிகிரி வெயில்**



**சென்னை,**

தமிழகத்தின் 7 இடங்களில் திங்கள்கிழமை (ஏப்.28) 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் பதிவானது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக திருச்சியில் 105 டிகிரி வெயில் சுட்டெரித்தது. தருமபுரி, கரூர் பரமத்தி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், வேலூர் உள்ளிட்ட இடங்களிலும் 100 டிகிரி வெயில் இருந்தது. சென்னையைப் பொருத்தவரை 99 டிகிரி வெயில் பதிவானது.

கோடையின் தாக்கம் வாட்டி வதைக்கும் நிலையில் வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஏப்.29) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு

(டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

திருச்சி 105

கரூர் பரமத்தி, மதுரை 104

பாளையங்கோட்டை

சேலம் 103

வேலூர் 102

தருமபுரி 101

சென்னை 99

கொடைக்கானல் 76

**மரவள்ளி சாகுபடிக்கு மாறிய கரும்பு விவசாயிகள்**

**சத்தியமங்கலம்,**

கரும்புக்கு மாற்றுப்பயிராக மரவள்ளி சாகுபடி செய்ய சத்தியமங்கலம் வட்டாரப் பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சத்தியமங்கலம் சுற்றுவட்டாரத்தில் சமவெளிப் பகுதிகளான ஆலத்துக்கோம்பை, சிவியார்பாளையம், கே.என்.பாளையம், செண்பகபுதூர், சிக்கரசம்பாளையம், பெரியகுளம், ராமபைலூர், பவானிசாகர், எரங்காட்டூர், மாரனூர், நஞ்சப்பகவுண்டர் புதூர், ஜல்லியூர், பெரியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்குள்ள கரும்பு விவசாயிகள் கிணற்று மற்றும் ஆற்று நீர் பாசனம் மூலம் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யத் துவங்கிவிட்டனர் .

10 மாதகால பயிரான மரவள்ளிக்கிழங்கு நடவு செய்யப்பட்டு 3 மாதங்கள் வரை 10 நாள்களுக்கு ஒரு முறையும், அதன்பிறகு 15 நாள்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்சப்படுகிறது. உழவுக்கூலி, களைவெட்டுதல், உரமிடுதல் உள்ளிட்ட செலவினங்கள் உள்பட ஒரு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவாகிறது. இங்கு பயிடப்படும் முள்வாடி ரக மரவள்ளிக்கிழங்கு தின்பண்டம் (சிப்ஸ்) தயாரிக்க பயன்படுத்துகிறது. இந்த ரகம் தடிமனமாக இருப்பதால், ஏக்கர் ஒன்றுக்கு 11 டன் வரை மகசூல் கிடைக்கும். தற்போது, மரவள்ளி ஒரு டன் ரூ.10 ஆயிரம் 500 வரை விற்கப்படுகிறது. இதுகுறித்து நெகமம்புதூரைச் சேர்ந்த விவசாயி பழனிசாமி திங்கள்கிழமை கூறியது: கடம்பூர் மலைப் பகுதியில் சாகுபடி செய்யப்படும் ரோஸ் ரக மரவள்ளியைக் கொண்டு ஜவ்வரிசி, மைதா போன்ற உணவுப் பொருள்களை

தயாரிக்கின்றனர். மானாவாரி சாகுபடியைவிட 2 டன் கூடுதல் மகசூல் கிடைப்பதால், மரவள்ளிக்கிழங்கு தற்போது சத்தி பகுதியிலும் பயிரிடப்பட்டுள்ளது. கரும்பைவிட உற்பத்தி செலவு குறைவு மட்டுமின்றி 50 சதம் கூடுதல் வருவாயும் கிடைக்கிறது. கரும்புக்கு மாற்றுப்பயிராக மரவள்ளிக்கிழங்கு சாகுபடி இருப்பதால், கரும்பு விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.59 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 42.59 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 684 கன அடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் 200 கன அடி நீரும், வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.8. டி.எம்.சி.

## வறட்சியால் பருத்தி விலை உயருமா?-ஆர்.வேல்முருகன்-

**கோவை,**

வறட்சி நிலவியபோதிலும் கடந்த இரு வாரங்களில் 355 கிலோ கொண்ட ஒரு கண்டி பருத்தி விலை ரூ.800 வரை உயர்ந்துள்ளது. ஆனால் இந்த விலை மேலும் உயர வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

அகில இந்திய அளவில் 1,759 பெரிய நூற்பாலைகளும், 1,326 சிறிய நூற்பாலைகளும் உள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் 917 பெரிய நூற்பாலைகளும், 1,031 சிறிய நூற்பாலைகளும் உள்ளன.

இந்தியாவைப் பொருத்த வரையில் பருத்தி பருவம் என்பது டிசம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை மட்டுமே. டிசம்பர் மாதத்தில்தான் புதிய பருத்தி வரத்து இருக்கும்.

355 கிலோ கொண்ட ஒரு கண்டி பருத்தி விலை, கடந்த இரு வாரங்களில் ஒரு கண்டிக்கு ரூ.800 வரை உயர்ந்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்

அறிவிக்கப்பட்ட தேசிய பஞ்சுக் கொள்கையை அமல்படுத்தியிருந்தால் மூலப் பொருள்களின் விலை அடிக்கடி ஏறி இறங்காமல் கட்டுக்குள் இருக்கும்.

உலகமயமாக்கல் கொள்கையை அமல்படுத்தியுள்ள நமது நாட்டில் பருத்தி போன்ற பொருள்களுக்கு கட்டுப்பாடு விதிக்கக் கூடாது; ஜவுளித் தொழிலில் ஒருசிலருக்கு மட்டும் சாதகமாகும் வகையில் கொள்கைகளை வகுக்கக் கூடாது என்று பஞ்சாலை உரிமையாளர்கள் பலர் தெரிவித்தனர்.

சீனாவைப் பொறுத்தவரையில் உலக பருத்தி உற்பத்தியில் 41 சதவீதத்தை பயன்படுத்துகிறது. சீனா இப்போது நூற்பாலைகளைக் குறைத்து வருகிறது. இதனால் பெரிய அளவுக்கு வெளிநாடுகளில் இருந்து பருத்தியை இறக்குமதி செய்ய வாய்ப்பில்லை. இதனால் இந்தியாவில் வறட்சி நிலவினாலும் பருத்தி விலை பெரிய அளவில் உயர்வதற்கு வாய்ப்பில்லை என்கிறார் இந்திய பருத்தி சம்மேளனத்தின் தலைவர் ஜெ.துளசிதரன்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியது: சர்வதேச அளவில் பருத்தி விலையில் பெரிய ஏற்றமோ இறக்கமோ இல்லை.

பொதுவாக கோடை காலத்தில் பருத்தி விலை அதிகரிக்கும். ஆனால் இப்போது பெரிய அளவில் அதிகரிக்கவில்லை. இந்தியாவில் வறட்சி நிலவினாலும் உலகச் சந்தைகளில் உள்ள நிலவரப்படி பருத்தி விலை அதிகரிக்க வாய்ப்பில்லை என்றார் துளசிதரன்.

## 1 மணி நேரத்தில் 100 கிலோ சிறுதானியங்களின் உமி நீக்கும் புதிய இயந்திரம் வடிவமைப்பு

**கோவை,**

நாட்டிலேயே முதன்முறையாக, ஒரு மணி நேரத்தில் 100 கிலோ சிறுதானியங்களின் உமி நீக்கும் புதிய இயந்திரத்தை கோவையில் உள்ள மத்திய வேளாண் பொறியியல் நிறுவனம் வடிவமைத்து சாதனை புரிந்துள்ளது. சிறு தானியங்களில் இருந்து சிறந்த முறையில் உமி நீக்கும் சி.ஐ.ஏ.ஐ. - மில்லட் மில் என்ற புதிய இயந்திர அறிமுக விழா கோவையில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. கோவை மத்திய வேளாண் பொறியியல் நிறுவன மண்டல ஆராய்ச்சி

நிறுவனத்தின் இயக்குநர் பிதம் சந்திரா தலைமை வகித்து புதிய இயந்திரத்தை அறிமுகப்படுத்தினார்.

சி.ஐ.இ.ஏ. - மில்லட் மில் இயந்திரத்தை வடிவமைத்த முதன்மை விஞ்ஞானி பாலசுப்பிரமணியன் கூறியது:

இந்த இயந்திரத்தின் மூலம் தினை, சாமை, வரகு, பனிவரகு, குதிரை வாலி போன்ற சிறுதானியங்களின் உமியை நீக்க முடியும். இதில் தானியங்களை முதல் முறையாக இயந்திரத்தில் போடும்போதே 95 சதவீத உமி நீக்கப்படுகிறது.

உலக்கையால் குத்தி உமி நீக்கினால் ஒரு மணி நேரத்திற்கு 1.5 கிலோ மட்டுமே உமி நீக்க முடியும். ஆனால், இப்புதிய கருவியில் 1 மணி நேரத்திற்கு 100 கிலோ சிறுதானியங்கள் வரை உமி நீக்கலாம். மொத்தம் 120 கிலோ எடை கொண்ட இக்கருவியை இருவர் எங்கே வேண்டுமானாலும் தூக்கிச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதிக சத்தம் வராமல் இருப்பதோடு, தூசு மற்றும் உமியால் சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க சைக்ளோன் பிரிப்பான் என்ற அமைப்பும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தை இயக்க ஒரு குதிரைத்திறன் கொண்ட ஒருமுனை (சிங்கிள் பேஸ்) மின் மோட்டார் போதுமானது. தற்போது, சிறுதானியங்களுக்கான தேவை அதிகமாக இருப்பதால் சிறு நகரங்களில் இந்த இயந்திரத்தை வியாபார ரீதியாகக் கூட பயன்படுத்தலாம் என்றார்.

விழாவில் மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்தின் தலைவர் அண்ணாமலை, கரும்பு இனப் பெருக்க ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் என்.விஜயன் நாயர், விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பல்லடம் கறிக்கோழி விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு

செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 75-ஆக இருந்தது.

விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை:

நாமக்கல் மண்டல முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.80, சென்னையில் ரூ. 3.

## கோடை நெல் சாகுபடி பரப்பளவு 10,000 ஹெக்டேரை கடந்தது

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் கோடை நெல் சாகுபடிப் பரப்பளவு 10,000 ஹெக்டேரை கடந்துள்ளது.

கோடை நெல் சாகுபடி தை அல்லது மாசி மாதத்தில் தொடங்கி சித்திரை அல்லது வைகாசி மாதங்களில் அறுவடை மேற்கொள்ளப்படும்.

சம்பா பருவத்தில் கூட பூச்சி, நோய் தாக்குதல், மழை, வெள்ளம் போன்ற காரணங்களால் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டு, மகசூல் குறைய வாய்ப்புள்ளது. ஆனால், கோடை நெல் சாகுபடியின்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், பூச்சி, நோய் தாக்குதல், வெள்ள அபாயம் போன்றவை ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, கோடை நெல் சாகுபடியில் மகசூல் அதிகமாகக் கிடைக்கும். எனவே, மாவட்டத்தில் இயல்பாக 12,000 ஹெக்டேரில் கோடை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில், 2012-ம் ஆண்டில் நிகழ்ந்த அதிக நேர மின் வெட்டு காரணமாக கோடை நெல் சாகுபடி 450 ஹெக்டேரில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இதேபோல, 2013-ம் ஆண்டிலும் மின் வெட்டால் ஏறத்தாழ 5,000 ஹெக்டேரில் மட்டுமே கோடை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

நிகழாண்டில் கோடை நெல் சாகுபடிப் பரப்பளவு 10,718 ஹெக்டேரை எட்டியுள்ளது. இது, கடந்த ஆண்டை விட இரு மடங்கு அதிகம்.

இதுகுறித்து காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.கே.ஆர். ரவிச்சந்தர் தெரிவித்தது: ஆந்திரா பொன்னி, கர்நாடக பொன்னி போன்றவற்றின் விலை அதிமாக இருப்பதாலும், அரிசி தேவை அதிமாக உள்ளதாலும் மோட்டார் பம்ப்செட் வைத்துள்ள விவசாயிகள் வாய்ப்புள்ள இடங்களில் கோடை நெல் சாகுபடி செய்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பல விவசாயிகள் எள், உளுந்து சாகுபடிக்கு மாறிவிட்டனர் என்றார் ரவிச்சந்தர்.

மேலும், சந்தையில் கூடுதல் விலை கிடைப்பதாலும் கோடை நெல் சாகுபடிப் பரப்பளவு அதிகரித்துள்ளதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இருப்பினும், இது இயல்பான பரப்பளவை விட ஏறத்தாழ 1,300 ஹெக்டேர் குறைவு.

**கருங்கல் சந்தையில் காய்கனி விலை உயர்வு**

**கருங்கல்,**

திருமணம் மற்றும் சுபநிகழ்ச்சிகளின் சீஸன் தொடங்கியதால் கருங்கல் தினசரி சந்தையில் காய்கனிகளின் விலைகள் உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முக்கிய தினசரி சந்தைகளில் ஒன்று கருங்கல் சந்தை ஆகும். இங்கு அனைத்து காய்கனிகளும் குறைந்த விலையில் கிடைப்பதால் திருமணம், கோயில் திருவிழாக்கள் மற்றும் அனைத்து சுபநிகழ்ச்சிகளுக்கும் கேரளம் மற்றும் கருங்கல், மார்த்தாண்டம், புதுக்கடை, குளச்சல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள மக்கள் வந்து பொருள்கள் மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில், காய்கனிகளின் விலை உயர்ந்து வருகிறது. குறிப்பாக, நாட்டு கத்தரிக்காய் ரூ. 20 லிருந்து 30 ஆகவும், வழுதனங்காய் ரூ. 25 லிருந்து 35 ஆகவும்,புடலங்காய் 25 லிருந்து ரூ. 40 ஆகவும், சேனைக்கிழங்கு ரூ. 15 லிருந்து ரூ. 25 ஆகவும், கேரட் ரூ. 20 லிருந்கு ரூ. 30 ஆகவும் உயர்ந்துள்ளது.

மே மாதம் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு கோடை விடுமுறையானதால் பொதுமக்கள் வசதிக்காக திருமணங்கள் மற்றும் சுப நிகழ்ச்சிகள் அதிகம்

நடைபெறுகிறது. இதனால் ஜூன் முதல் வாரம் வரை காய்கனிகள் விலை உயர வாயப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை

**ராமேசுவரம்,**

அரசால் தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பாம்பன் பகுதி நாட்டுப் படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாம்பன், ராமேசுவரம் பகுதிகளில் 200க்கு மேற்பட்ட நாட்டுப் படகுகள் உள்ளன. இந்த படகுகளில் மீனவர்கள் தென் கடலான ஆழ்கடல் பகுதியில் சென்று ஒரு வாரம் தங்கி மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் நாட்டுப் படகு மீனவர்கள் ஒரு பகுதியினர் ஆழ் கடலில் அரசால் தடை செய்யப்பட்ட சுருக்குமடியை பயன்படுத்தி மீன்பிடித்து வருவதால் அப்பகுதியில் மீன் இனப் பெருக்கத்தை அழித்தும், பவளப் பாறைகளை சேதப்படுத்தியும் வருகின்றனர் என்று புகார்கள் எழுந்தன.

இதனால், வருங்காலங்களில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதால் மற்ற மீனவர்கள் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மீன்வளத் துறை அதிகாரிகளிடம் கடந்த ஆறு மாதங்களாக வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலதாமதம் செய்து வருவதால் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கையை தீவிரப்படுத்த பாம்பன் நாட்டுப் படகு மீனவகள் சார்பாக சங்க பிரதிநிதி எஸ்.பி. ராயப்பன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மே 4 முதல் அக்னி நட்சத்திரம்

**சென்னை**: தமிழகத்தில், கோடை வெயில் அதிகரித்து வரும் நிலையில், வெப்பத்தின் தாக்கமும் அதிகரித்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, வேலூர் மாவட்டத்தில், 42 டிகிரி செல்சியஸ், சேலத்தில், 41; தர்மபுரி, திருச்சி, திருப்பத்தூர், 40; மதுரை, பாளையங்கோட்டை, திருத்தணியில், 39 டிகிரி செல்சியஸ், சென்னையில், 36 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

தமிழகத்தில், மே 4 முதல், 28ம் தேதி வரை, அக்னி நட்சத்திர காலம். இந்த கால கட்டத்தில் வெப்பம் அதிகரிக்கும்.

அக்காலத்தில் பதிவாகும் வெப்பநிலை தற்போதே பதிவாகி வருகிறது.

கோடை மழையைப் பொறுத்தவரை, தென்காசி, 2, செங்கோட்டை, குழித்துறையில், ஒரு செ.மீ., மழை பெய்தது.

### குன்னூரில் பூத்து குலுங்கும் "மெரிகோல்டு'




**குன்னூர்**: குன்னூர் காட்டேரி பூங்காவில், "மெரிகோல்டு' மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ளது காட்டேரி பூங்கா. இங்கு, 50 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.
இதில், பிரென்ச் மெரிகோல்டு, இன்கா மெரிகோல்டு, டேலியா, டெய்சி, வால்சம் ஆகிய மலர் செடிகள், கடந்த மார்ச்சில் நடப்பட்டன. இதில், பிரென்ச் மெரிகோல்டு, இன்கா மெரிகோல்டு, டேலியா போன்றவை பூத்துக் குலுங்கத் துவங்கியுள்ளன.

## கொடைக்கானலில் கோடை விழா : மே 24ல் மலர் கண்காட்சியுடன் துவக்கம்

**திண்டுக்கல்**: ""கொடைக்கானலில், மே 24, 25ல் கோடை விழா துவக்கமாக, மலர் கண்காட்சி நடக்கிறது.
சுற்றுலா பயணிகள் அதிகம் வந்துசெல்லும் இடங்களில், "வெப் கேமரா' பொருத்தப்பட உள்ளது," என, திண்டுக்கல் கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது:
கொடைக்கானலில், கோடை விழா, 10 நாட்களுக்கு நடக்கிறது. துவக்கமாக, மே 24, 25ம் தேதிகளில், பிரையண்ட் பூங்காவில் மலர் கண்காட்சி நடக்கிறது. மருத்துவ முகாம், நாய் கண்காட்சி மற்றும் கால்பந்து, கைப்பந்து, மாரத்தான், கிரிக்கெட் போன்ற விளையாட்டு போட்டிகளும் நடத்தப்படும். கலை பண்பாட்டு துறை சார்பில், கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.
கொடைக்கானல் ஏரியில், சுற்றுலா பயணிகளுக்கு, மீன் பிடிக்கும் போட்டிகள் நடத்தப்படும்; படகு அலங்கார அணிவகுப்பு நடைபெறும்.
கூடுதல் பேருந்து வசதிகள் மற்றும் உணவகங்களில், தரமான உணவுகள் வழங்குவதை கண்காணிக்க, குழு அமைக்கப்படும்.
குற்றங்கள் ஏற்படாமல் தடுக்க, வெள்ளி நீர்வீழ்ச்சி சுங்கச்சாவடி, கொடைக்கானல் ஏரியை சுற்றிலும், "வெப்கேமரா' பொருத்தப்பட உள்ளது.

இவ்வாறு, அவர் கூறினார்.

**வறட்சியால் மாம்பழம் உற்பத்தி குறைவு : வரலாறு காணாத விலை உயர்வு**




வறட்சி காரணமாக, முன்பருவ ரகங்களான செந்தூரா, இமாம் பசந்த் மாம்பழங்களின் உற்பத்தி குறைந்ததால், வரலாறு காணாத அளவுக்கு விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில், மாம்பழம் உற்பத்தியில், கிருஷ்ணகிரி மாவட்டம் முதல் இடத்தில் உள்ளது.

மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், மா சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, சீரான மழை இல்லாததால், வறட்சி ஏற்பட்டு, மா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

வழக்கமாக, ஏப்ரல் துவக்கத்தில், முன்பருவ ரக மாம்பழம் விற்பனைக்கு வந்துவிடும். தற்போது, சொட்டு நீர் பாசனம் மூலம் விளைந்த, முன்பருவ ரகமான செந்தூரா, இமாம் பசந்த் ஆகிய மாம்பழங்கள், விற்பனைக்கு வந்துள்ளன.

கடந்த ஆண்டு, செந்தூரா ஒரு கிலோ, 30 ரூபாய்க்கும், இமாம் பசந்த் 100 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு, விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளதால், வரலாறு காணாத அளவு விலை உயர்ந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி, ஒரு கிலோ செந்தூரா, 50 ரூபாய்க்கும்; இமாம்பசந்த், 150 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

கிருஷ்ணகிரியில், இந்த ஆண்டு, வழக்கத்தை விட, 25 சதவீதம் மட்டுமே, மா சாகுபடியாகும் என்ற நிலையில், மாம்பழம் விலை மேலும் உயரும் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## பருத்தி ஏற்றுமதி குறைய வாய்ப்பு



நடப்பு பருவத்தில் (அக்.,–செப்.,), நாட்டின் பருத்தி ஏற்றுமதி, குறைய வாய்ப்புள்ளது என, தெரியவந்துள்ளது. நடப்பு பருவத்தின், அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 94 லட்சம் பொதிகளாக (ஒரு பொதி–170 கிலோ) சற்று உயர்ந்துள்ளது.இது, இந்திய பருத்தி ஆலோசனை கழகத்தின் மதிப்பீட்டு அளவான, 90 லட்சம் பொதிகளை விட, அதிகமாகும்.பயன்பாடு:நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.75 கோடி பொதிகளாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த பருவத்தை விட சற்று அதிகமாகும்.உள்நாட்டில், பருத்திக்கான தேவை, கடந்த ஆண்டை விட, 6 சதவீதம் அதிகரித்து, 2.90 கோடி பொதிகளாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்நிலையில், உலகளவில் பருத்தியை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்ளும் சீனாவில், இதன் பயன்பாடு குறைந்துள்ளது.

மேலும், சீனாவிடம் பருத்தி அதிகளவில் கையிருப்பு உள்ளது. இதையடுத்து, நடப்பு பருவத்தின், கடைசி ஆறு மாத காலத்தில், நாட்டின் பருத்தி ஏற்றுமதியில், 10 லட்சம் பொதிகள் அளவிற்கு குறைய வாய்ப்புள்ளது என, ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.உலகின் மொத்த கையிருப்பில், சீனாவின் பங்களிப்பு, 60 சதவீதமாக உள்ளது. சீனாவில், பருத்திக்கான தேவை ஆண்டுக்கு, 77 லட்சம் டன் என்ற அளவில் உள்ள நிலையில், அந்நாடு, 1.26 கோடி டன் பருத்தியை கையிருப்பு வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.சுங்க வரி:தேவையை விட, கையிருப்பு அதிகமாக உள்ளதால், சீனா பருத்தி இறக்குமதியை தவிர்த்து வருகிறது.மேலும், நடப்பாண்டில், சீனா பருத்தி இறக்குமதியை குறைக்கும் வகையில், சுங்க வரியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது.சீனாவில் பருத்திக்கான தேவை குறைந்துள்ளதையடுத்து, சர்வதேச அளவில், பருத்தியின் விலை குறைந்து வருகி-

றது. இந்நிலையில், நடப்பாண்டில், உலகளவில் பருவ நிலை மாறுபாட்டால் மழை அளவு குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஒட்டு மொத்த அளவில் வேளாண் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும்.விலை உயரும்அவ்வாறு, பாதிப்பு ஏற்படும் நிலையில், உலகளவில் பருத்தியின் விலை உயர வாய்ப்புள்ளது. இருப்பினும் தற்போதைய நிலையில், உலகளவில், பருத்திக்கான தேவை குறை-வாகவே உள்ளது.பொதுவாக ஒவ்வொரு ஆண்டும், ஏப்ரல் முதல் ஜூலை வரையி-லான காலத்தில், பருத்தியின் விலை குறைந்து காணப்பட்டாலும், பருவத்தின் கடைசி காலாண்டில், பருத்தியின் விலை உயர்வது என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது என, வர்த்தகர்கள் குறிப்பிட்டனர்.– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

**கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் ஆயிரம் எள் மூட்டைகள் குவிந்தன**

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு எள் மூட்டைகள் வரத்து அதிகரித்துள்ளது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் எள் வரத்து துவங்கியுள்ளது. எள் மூட்டை 7,950 ரூபாய் வரை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. இந்தாண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் எள் அறுவடை துவங்கப்பட்டுள்ளதால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கடந்த சில நாட்களாக எள் மூட்டை வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நேற்று விவசாயிகள் தாங்கள் விளைவித்த எள், மக்காசோளம், மணிலா, உளுந்து போன்ற தானியங்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் ஒழுங்குமுறை கூடத்திற்கு 20 மூட்டைகள் மணிலா, 1,100 மூட்டைகள் எள், 1,500 மூட்டைகள் மக்காசோளம் ஆகிய தானியங்கள் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதனை மதுரை, விருதுநகர், தஞ்சை, திருச்சி ஆகிய ஊர்களில் இருந்து வந்த வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூட மேலாளர் முருகன் முன்னிலையில் தானியங்களின் தரத்திற்கு ஏற்றவாறு மறைமுக ஏலம் முறையில் விலை நிர்ணயம் செய்தனர். இதில், எள் ஒரு மூட்டை அதிகபட்ச விலையாக 7,950 ரூபாயும் குறைந்தபட்சமாக 7,250 ரூபாயும், மக்காசோளம் மூட்டை அதிகப்பட்ச விலை 1,356, குறைந்தபட்ச விலை 1,259 ரூபாயும் விலை போனது.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 25 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 10 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில்நேற்று, பருத்தி ஏலம் நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், 446 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 7,050, குறைந்த பட்சமாக, 6,460, ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,390, குறைந்தபட்சமாக, 5,059 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பருத்தியை, 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## விதை பரிசோதனை நிலையம் இடமாற்றம்

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மோகன்ராவ் காலனியில் இயங்கி வந்த விதை பரிசோதனை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மோகன்ராவ் காலனியில், விதை பரிசோதனை நிலையம் இயங்கி வந்தது. தற்போது, இந்த விதை பரிசோதனை நிலையம், கலெக்டர் அலுவலகத்தின் பின்புறம் உள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலக வளாக கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, விதை பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள், "வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலக வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம், கிருஷ்ணகிரி, 635115,' என்ற முகவரியில் விதை மாதிரியை அனுப்பி, 30 ரூபாய் கட்டணம் செலுத்தி, விதையின் தரத்தினை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு, அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வறட்சி விவசாயிகளுக்கு கை கொடுக்கும் "எள்' பயிர்

**சத்தியமங்கலம்**: சத்தியமங்கலம் பகுதியில், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், தண்ணீர் பற்றாக்குறை உள்ள விவசாயிகள், எள் பயிரிட்டுள்ளனர். சத்தியமங்கலம் பகுதி, விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பகுதியாகும். இப்பகுதியில் வசிக்கும் மக்கள், விவசாயம் மற்றும் அதை சார்ந்துள்ள தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். கடந்த, மூன்று ஆண்டுகளாக, சத்தியமங்கலம் பகுதியில் போதிய மழையின்றி, கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால், இப்பகுதியில் விவசாயம் பெரிதும் பாதித்துள்ளது. வறட்சியால், நிலத்தடி நீர்மட்டம் கீழ்நோக்கி செல்வதால், விவசாய கிணறுகளில் சொற்ப அளவு தண்ணீர் மட்டுமே உள்ளது. இதனால், விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை சமாளிக்க, பெரும்பாலான விவசாயிகள், தங்கள் கிணற்றில் இருக்கும் சொற்ப அளவு தண்ணீரை சரிக்கட்ட எள் பயிர் நடவு செய்துள்ளனர். விதைக்கப்பட்ட நாளில் இருந்து, மூன்று மாதங்களில், அறுவடைக்கு தயார் ஆகும், எள் பயிருக்கு தண்ணீர் குறைந்த அளவு இருந்தாலே போதும். விவசாயிகள், தங்கள் வயலில் விதைக்கப்பட்ட எள், தற்போது வயலில் பூத்து குலுங்குகிறது. இன்னும், தங்கள் கிணறுகளில் இருக்கும் சிறிது தண்ணீரை, இந்த எள் செடிக்கு பாய்ச்சினால், இன்னும் ஒரு மாதத்தில் பலன் கொடுக்கும், என்கின்றனர், சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள்.

## கொப்பரை விலை உயர்ந்தும் பலனில்லை!; உற்பத்தி குறைவால் இந்நிலை

**பொள்ளாச்சி** : காங்கேயம் மார்க்கெட் நிலவரப்படி, கொப்பரை முதல் தரம் 107 ரூபாய் வரை சென்றது. உற்பத்தி குறைவால், விலை உயர்ந்தும் விவசாயிகளுக்கு பலன் கிடைக்காத சூழலே உள்ளது.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், மற்ற சாகுபடிகளை விட தென்னை அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், சாகுபடி செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. கொப்பரை தேங்காய் தரம் பிரிக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தேங்காய்க்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக தவித்து வருகின்றனர். இந்நிலையில், கடும் வறட்சியால், தென்னை மரங்கள் நீரின்றி வாடியது. மரங்களும் வாடியதால், மார்க்கெட்டிற்கு தேங்காய்

வரத்தும் முற்றிலும் குறைந்துள்ளது. தேங்காய் கிடைக்காததால், அதன் விலையும் கிடு..கிடு..வென உயர்ந்து வருகிறது.

விலை உயர்வு : பொள்ளாச்சி பகுதியில், தேங்காய் வரத்து குறைந்து வருவதால், அதன் விலையும் சில மாதங்களாக உயர்ந்து வருகிறது. நேற்றைய காங்கேயம் மார்க்கெட் நிலவரப்படி, முதல் தர கொப்பரை 107 ரூபாயும்; இரண்டாம் தர கொப்பரை 105 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. முதல் தர தேங்காய் ஒரு டன் 30,000 ரூபாயும், இரண்டாம் தர தேங்காய் 29,000 ரூபாய்க்கு சென்றது. ஒரு கிலோ தேங்காய் பவுடர் 145 ரூபாய் முதல் 147 வரையும்; ஒரு டின் எண்ணெய் 2,270 ரூபாய்க்கும் சென்றது.

பலனில்லை: தேங்காய் வரத்து மார்க்கெட்டிற்கு முற்றிலுமாக குறைந்து வருவதால், அதன் விலை உயர்விற்கு காரணமாக உள்ளது. உள்ளூர் வரத்து மட்டுமின்றி, மற்ற பகுதிகளிலிருந்து வரும் வரத்தும் குறைந்து விட்டது. வறட்சியால், தேங்காய் உற்பத்தி முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விலை உயர்ந்து வருகிறது; ஆனால் விவசாயிகளுக்கு பலன் கிடைக்காத சூழலே நிலவுகிறது.

'விலை உயர வாய்ப்பு' : விவசாயிகள் கூறுகையில்,' வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களில், காய்ப்புத்திறன் முற்றிலுமாக குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டில், தேங்காய் விலை உயர்ந்து வருவது மகிழ்ச்சியளித்தாலும்; அதனை முழுமையாக பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது. கடந்த சில ஆண்டுகளை விட இந்தாண்டு தான் 107 ரூபாய் வரை கொப்பரை விலை சென்றுள்ளது. மேலும், விலை உயரக்கூடிய வாய்ப்புள்ளது,' என்றனர்.

## வெல்லம் விலை வீழ்ச்சி: கவலையில் விவசாயிகள்

**வேலாயுதம்பாளையம்**: வெல்லம் விலை வீழ்ச்சியடைந்து வருவதால், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டம், முத்தனூர், கவுண்டன்புதூர், நடையனூர், கரைப்பாளையம், நொய்யல், சேமங்கி, கொளத்துப்பாளையம், வேட்டமங்கலம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்,10,000 மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பியிரிட்டுள்ளனர். நிலத்தில் கரணை பதித்தவுடன் பல விவசாயிகள் புகளூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டிச் செல்வதற்கு பதிவு செய்கின்றனர். பதிவு செய்யாத விவசாயிகள் கரும்பு விளைந்தவுடன் பல்வேறு பகுதிகளில் உள்ள

வெல்லம் தயாரிக்கும் ஆலை அதிபர்களுக்கு டன் ஒன்றுக்கு, 2,400 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.

வாங்கிய கரும்புகளை இயந்திரம் மூலம் சாறு பிழிந்து இரும்பு கொப்பரையில் ஊற்றி காய வைத்து சரியான பதம் வந்து பாகு ஆனவுடன், மர அச்சுத்தொட்டியில் ஊற்றி உலரவைத்து குப்பிர கவிழ்த்தி மர சுத்தியால் தட்டுகின்றனர். அதிலிருந்து அச்சு வெல்லம் மள, மளவென விழுகிறது. அதே போல் மரத்தொட்டியில் கரும்பு பாகுவை ஊற்றி உலரவைத்து துணிகள் மூலம் உருண்டை பிடித்து உருண்டை வெல்லம் தயாரிக்கின்றனர். பின்னர் நன்கு உலரவைத்து சாக்குகளில், 30 கிலோ கொண்ட சிப்பங்களாக தயார் செய்கின்றனர்.

தயார் செய்யப்பட்ட வெல்ல சிப்பங்களை வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, உத்ராஞ்சல், உத்திரப்பிரதேசம், சண்டிகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரத்தில், 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் 1,100 ரூபாய்க்கும், 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம் ஒரு சிப்பம், 1,100 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, 100 ரூபாய் குறைந்து, ஒரு சிப்பம் உருண்டை வெல்லம் 1,000 ரூபாய்க்கும், ஒரு சிப்பம் அச்சு வெல்லம், 1,000 ரூபாய்க்கும் விற்பனையானது. வெளி மாநிலங்களில் வெல்லம் விற்பனை மந்தமடைந்ததால், வெல்லம் விலை விற்பனை வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிகிறது.

**கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்க பல்லுயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்**

**கரூர்**: "அசோலா தீவனம் அளிப்பதால், கால்நடைகளின் உற்பத்தி திறன் அதிகரிக்கும்' என, பல்லுயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் தெரிவிக்கப்பட்டது. மத்திய சுற்றுப்புற அமைச்சகம் மற்றும் அமைதி அறக்கட்டளை சார்பில், பல்லுயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் கரூர் மாவட்டம் செவந்திபாளையம் புதூரில் நடந்தது. இதில், தொண்டு நிறுவன இயக்குனர் ராமஜெயம் பேசியதாவது: கால்நடைகள், விலங்குகள், பறவைகளுக்கு வி.கே., நார்டெப் முறையில் அசோலா பயிர் வளர்த்து தீவனத்தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில் செயல்படுத்தலாம். காடுகள் வளர்ப்புத்திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு உணவளித்துகொண்டிருந்த

நிலங்களில் யூகலிப்டஸ் போன்ற மரவகைகளை பயிரிட்டதே தீவன தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம். பெரிய வகை தீவனப்பயிர்களுக்கு, அதிகளவு தண்ணீர், ரசாயன உரங்கள் தேவைப்படுகிறது. ஏழை விவசாயிகளால் இதை செய்ய முடியாது.

எல்லோராலும் மிக எளிதாக வளர்க்கக்கூடிய புரதச்சத்து மிக்க தீவனமாக அசோலா தீவனப்பயிர் உள்ளது. அசோலா கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும், ஒன்றுக்கு ஒன்று என்ற வகிதத்தில் கலந்துகொடுக்கலாம். கால்நடைகளின் ஆராக்கியம், வாழ்நாள் நீடித்து பாலின் அளவு, தர ம் மேம்பட்டு, 10முதல் 15சதவீதம் பால் உற்பத்தி அதிகரிக்கும்.

அசோலா தீவன பயிரினம் கொடுக்கப்பட்ட கோழியின் எடை அதிகரித்துள்ளது. இறப்புவிகிதம் குறைந்து இறைச்சி நல்ல நிறம், சுவை மிகுந்ததாக இருக்கும். முட்டை எண்ணிக்கை அதிகரிக்கும். ஆடு பிற விலங்குகள் முயல், பன்றி, காடை, மீன் போன்றவற்றுக்கும் உணவாக கொடுக்கலாம்.

நெல்வயல்களுக்கு நுண்ணுயிர் உரமாக பயன்படுத்தலாம். ஓர்ஏக்கர் நிலத்தில், 200 கிலோ அசோலாவை இடவேண்டும். இது, 20 முதல், 25 நாட்களில் நன்கு வளர்ந்து, ஓர் ஏக்கர் நிலம் முழுவதும் பரவிவிடும்.

நுண்ணுயிர் உரமாக பயன்படுத்துவதால், 20 முதல், 30 சதவீதம் உரச்செலவை குறைக்கலாம். வயலில் களைகள் வளர்வது கட்டுப்படுத்தப்படும். நீர் ஆவியாதல் கட்டுப்படுத்தப்பட்டு, 20முதல் 25சதவீதம் அதிகமாக வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## பூச்சி நோய் மேலாண்மை; இயக்குனர் யோசனை

**மதுரை** : "இயற்கை வேளாண்மையில், நான்கு முறைகளில், பூச்சி நோய் மேலாண்மை செய்ய வேண்டும்," என, மதுரை நீர் மேலாண்மை பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: கோடை உழவு செய்தால், கூட்டுப் புழுக்கள் அழிக்கப்படும். நோயற்ற, சான்று பெற்ற, பூச்சிநோய் எதிர்ப்புத் தன்மையுள்ள விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களை, ஒரே நேரத்திலும், பயிர் சுழற்சி முறைகளை கையாள வேண்டும். பொறி பயிர், ஊடுபயிர் மற்றும் வரப்பு பயிர் சாகுபடி செய்ய வேண்டும். புகையானில் இருந்து தப்பிக்க, நீர்மறைந்த பின்,

நீர்கட்ட வேண்டும்.பூச்சிநோய் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கியும், முட்டை புழுக்களை சேகரித்தும் அழிக்க வேண்டும். பறவை இருக்கைகள், இனக்கவர்ச்சி பொறிகள் அமைக்க வேண்டும். வயலுக்கு நன்மை செய்யும் பூச்சிகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்க வேண்டும். வேப்பங்கொட்டை போன்ற தாவரப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்பட்ட பூச்சி விரட்டிகளை பயன்படுத்த வேண்டும். இம்முறையில், பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்கலாம், என்றார்.

## செயலிழக்கும் சொட்டுநீர் பாசன அமைப்புகள்

**தேனி** : தேனி மாவட்டத்தில், சொட்டுநீர் பாசன அமைப்புகள், உப்பு படிமானத்தால் செயல்இழந்து வருகின்றன.இதனை தடுக்க, தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.மாவட்டம் முழுவதும் பல்வேறு பயிர்களுக்கு 25 ஆயிரம் எக்டேர் பரப்பில் சொட்டு நீர் பாசன அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது, வெயில் அதிகம் உள்ளதால் சொட்டுநீர் பாசன அமைப்புகளில், உப்பு படிமானம் ஆகிறது. இந்த உப்பு படிமானம் காரணமாக, நீர் பாய்ச்சுவதில் பிரச்னை ஏற்பட்டு, அமைப்புகள் செயல் இழக்கின்றன.இப்பிரச்னையை தவிர்க்க, அமிலக்கரைசலை ஒரு நாள் இரவு முழுக்க, சொட்டுநீர் பாசன அமைப்புகளுக்குள் வைத்திருந்தால், உள்ளே படிந்துள்ள உப்பு கரைந்து விடும். மறுநாள் அமிலக்கரைசலை வெளியேற்றி விட்டால், வழக்கம் போல் அடுத்தடுத்து நீர் பாய்ச்ச முடியும். அமிலக்கரைசலை பயன்படுத்துவது குறித்து சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுத்த, கம்பெனிகளை கலந்து ஆலோசனை செய்ய வேண்டும் என தோட்டக்கலைத்துறை அறிவுறுத்தி உள்ளது.

## குறையும் சோத்துப்பாறை அணை நீர் மட்டம்; வாழை, தென்னை விவசாயம் பாதிப்பு

**பெரியகுளம்** : மழை பெய்யாததால் சோத்துப்பாறை அணையில் நீர் மட்டம் குறைந்து வருவதால், அப்பகுதியில் வாழை,தென்னை விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது.

தேனி மாவட்டம், பெரியகுளத்திலிருந்து 8 கி.மீ., தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் நீர் மட்டம் மொத்த உயரம் 126 அடி. கடந்தாண்டு, நவ.,5ல் அணை நிரம்பியது, டிச.,12ல் விவசாயத்திற்காக திறந்து விடப்பட்டது. அணையின் நீர் மட்டம் குறைந்ததால், கடந்த ஜன.,19ல் தண்ணீர் திறந்து விடப்படுவது நிறுத்தப்பட்டது. தொடர்ந்து, நீரின் அளவு ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே இருந்தது. நேற்று அணையின் நீர் மட்டம் 60.18 (126) அடி.

கடந்தாண்டு ஏப்.,28ல் 73.64 அடியாக இருந்தது.வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளதால் சோத்துப்பாறை அணை நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது, பெரியகுளம் நகர் பகுதிக்கு மட்டும், குடிநீருக்கு தினமும் 3 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையை சுற்றி ஊற்றெடுக்கும், நூற்றுக்கணக்கான கிணறுகளில் தண்ணீர் வற்றி உள்ளது.

நேற்று முன்தினம் ஆறுதலாக சாரல் மழை பெய்தது. 6 மி.மீ., மழை பதிவானது. சோத்துப்பாறை அணை நீர் மட்டம் குறைவினால், இப்பகுதியில் வாழை, தென்னை உட்பட விவசாயம் கேள்விக்குறியாக உள்ளது. பாதிப்பு:சோத்துப்பாறை அணையின் நீர் பாய்ந்த, பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம், தாமரைக்குளம், பாப்பிபட்டி கண்மாய்கள் வறண்டுள்ளது. இவற்றை நம்பியுள்ள, ஆயிரத்து 892 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களும். நூற்றுக்கணக்கான ஏக்கர் மறைமுகமான விவசாய நிலங்களும், புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள ஆயிரத்து 40 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

## செயற்கைகோள் தொழில் நுட்பத்தில் பயிர்களின் வளர்ச்சி கணக்கீடு

**காரைக்குடி** : செயற்கைகோள் தொழில் நுட்பத்தில், நெல் பரப்பை கண்டறிந்து, அதற்கேற்ப உண்மையான பயனாளிகளுக்கு, வறட்சி இழப்பீடு வழங்க, இன்சூரன்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

வறட்சி காலங்களில் விளைச்சல் இல்லை, என்றால், அந்த இழப்பை சரிகட்ட, பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ், இழப்பீடு தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கிராம அளவில், வி.ஏ.ஓ., வேளாண் அலுவலர் தலைமையில், வறட்சி கணக்கெடுப்பு நடக்கிறது.

பலர் விவசாயம் செய்யாமலேயே செய்ததாகவும், தரிசான நிலங்களையும், வறட்சியால் பாதிக்கப்பட்டது, என கூறி இன்சூரன்ஸ் பெற்று வருகின்றனர். இதனால், அரசுக்கு கணிசமான தொகை இழப்பு ஏற்படுவதுடன், உண்மையான பயனாளிகளும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு, ஒரு சில இடங்களில் 100 சதவீத இன்சூரன்ஸ் தொகையும், ஒரு சில இடங்களில் இழப்பீடே வழங்காத நிலையும் ஏற்பட்டது.

சிவகங்கை மாவட்டத்தில், மித்ராவயல், பெரியகோட்டை, நென்மேனி பகுதிகளில், கணக்கெடுப்பில் ஏற்பட்ட குளறுபடியால், இப்பகுதி விவசாயிகள் யாருக்கும் வறட்சி நிவாரண தொகை வழங்கவில்லை.

இனி வரும் காலங்களிலும், இது போன்ற நிலைமை ஏற்படாமல், இருக்க, "செயற்கை கோள் தொழில் நுட்பத்தில்,' நெல் பயிரிடும் பரப்பை கண்டறிந்து, பயிர்களின் விளைச்சலை ஆராய்ந்து, அதற்கேற்ப இன்சூரன்ஸ் தொகை வழங்க, இன்சூரன்ஸ் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

முதற்கட்டமாக, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை மாவட்டங்களில், இம்முறை இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது.

2 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்தவர்களின் கணக்கெடுப்பை, செயற்கை கோள் முறையில் மேற்கொள்ளலாம்.

அதுமட்டுமன்றி, வேளாண்மை துறை அலுவலர்கள் மூலம், பயிர்கள் விதைத்த காலத்திலிருந்து, வளர்ச்சி காலம் வரைக்கும், 15 நாளுக்கு ஒரு முறை, கணக்கெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வேளாண்மை வல்லுனர்களுக்கான பயிற்சி, கடந்த மாதம் பிலிப்பைன்ஸ் உலக நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மே 1 முதல் அல்போன்சா மாம்பழம் இறக்குமதிக்கு தடை

**ஐரோப்பிய நாடுகள் முடிவால் தமிழக உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பா?**



**சேலம்:** ஐரோப்பிய நாடுகளில் வரும் மே 1ம் தேதி முதல் இந்திய மாம்பழங்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவால் தமிழகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது என உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இருந்து அல்போன்சா மாம்பழங்களை வரும் மே 1ம் தேதி முதல் இறக்குமதி செய்ய தடை விதித்து ஐரோப்பிய யூனியன் முடிவு செய்துள்ளது. கடந்தாண்டு இறக்குமதி செய்யப்பட்ட பழங்களில் தடை செய்யப்பட்ட பூச்சிகொல்லிகள் பயன்படுத்தப்பட்டதாக ஐரோப்பிய யூனியன் சுகாதார நிலைக்குழு பரிந்துரையை ஏற்று ஐரோப்பிய ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இது தற்காலிக தடை என்றாலும் அடுத்த ஆண்டு டிசம்பர் 31 வரை நீடிக்கும் எனவும், இதை மறு ஆய்வு செய்ய டிசம்பர் 31க்கு முன்பு முடிவெடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் மகாராஷ்டிரா, குஜராத் பகுதிகளில் அல்போன்சா மாம்பழம் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. அல்போன்சா, பங்கனப்பள்ளி மாம்பழங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. தமிழகத்திலும் கிருஷ்ணகிரி, பொள்ளாச்சி பகுதிகளில் அல்போன்சா சாகுபடி அதிகரித்துள்ளது. ஐரோப்பிய

நாடுகளில் மட்டும் மாம்பழ பருவத்தில் (மே, ஜூன்) ஆண்டுக்கு 1.60 கோடி மாம்பழங்கள் இறக்குமதியாகின்றன. ஐரோப்பிய யூனியனின் இந்த முடிவுக்கு அங்குள்ள இறக்குமதியாளர்கள் மட்டுமின்றி இந்தியாவிலும் எதிர்ப்பு வலுக்கிறது. அல்போன்சா மாம்பழங்கள் ஐரோப்பிய நாடுகளில் பல ஆண்டுகளாக இறக்குமதி செய்யப்படுகிறது. இப்பிரச்னையில் மத்திய அரசு தலையிட்டு தீர்வு காணவேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. தமிழகத்தில் தற்போது மாம்பழ சீசன் சூடு பிடித்துள்ளது.

ஆனால், ஐரோப்பிய தடையால் தமிழக சாகுபடியாளர்களையோ, ஏற்றுமதியாளர்களுக்கோ பாதிப்பு இல்லை. சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மாம்பழ சாகுபடி அதிகம். இந்த பகுதிகளிலும் அல்போன்சா, பங்கனப்பள்ளி, ரத்தனகிரி உள்ளிட்ட பல ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சேலத்தை சேர்ந்த மாம்பழ விற்பனையாளர் ஜெயபால் கூறுகையில், ‘‘நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்ததால் மாம்பழ சாகுபடி 50 சதவீதத்திற்கு மேல் குறைந்துள்ளது.

எனவே நடப்பாண்டில் உள்ளூர் தேவைக்கே இங்குள்ள மாம்பழங்கள் போதுமானதாக இருக்காது. மேலும் தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் மாம்பழத்தில் 60 சதவீதம் வரை கூழ் தயாரிப்பு நிறுவனங்கள் நேரடியாக கொள்முதல் செய்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் நேரடியாக பழங்கள் இறக்குமதிக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் எந்த பாதிப்பும் இல்லை,’’ என்றார். கிருஷ்ணகிரியை சேர்ந்த மாம்பழ கூழ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் மதியழகன் கூறுகையில், ‘‘தமிழகத்தில் பொள்ளாச்சி பகுதியில் இருந்து மட்டுமே மொத்த உற்பத்தியில் சுமார் ஒரு சதவீத மாம்பழங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

இதனால் தமிழகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

மேலும் இந்த ஆண்டு மழையின்மையால் உற்பத்தி குறைந்திருப்பதால் மாம்பழக்கூழ் தயாரிப்புக்கே அதிகமாக தேவைப்படும். எனவே உள்ளூர் சாகுபடியாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படாது,’’ என்றார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 280 காசு**



**நாமக்கல்**: கோடைக்காலம் துவங்கியதை தொடர்ந்து முட்டை உற்பத்தி நாடு முழுவதும் சரிந்துள்ளது. இதனால் நாமக் கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முட்டை விலையில் 12 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 268 காசில் இருந்து 280 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. இம்மாத துவக்கத்தில் முட்டை விலை 240 காசுக ளாக இருந்தது. மற்ற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை: பெங்களூர்- 290, ஐதராபாத்- 251, மும்பை- 289, டெல்லி- 248.

**சொட்டு நீர் பாசன கரும்பு வயல்கள் ஆய்வு**

**திருவெண்ணெய்நல்லூர்**, : விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே அரசூர், திருவெண்ணெய்நல்லூர், பிள்ளையார்குப்பம் கோட்டத்திற்கு உட் பட்ட பகுதிகளில் நிழல் வலை கரும்பு நாற்றங்கால் மற்றும் சொட்டு நீர் பாசன வயல்களை சர்க்கரை துறை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் மற்றும் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க் கரை ஆலையின் கரும்பு அபிவிருத்தி அலுவலர் பாண்டியன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அப்போது அவர்கள் கூறும்போது, தற்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் விவசாயிகள் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, சொட்டு நீர் பாசன வயல்களை அமைத்து குறைந்த செலவில் நிறைந்த வருமானத்தை பெற்று வருகின்றனர். எனவே விவசாயிகள் அதிக பரப்பளவில் இந்த முறையில் கரும்பு

சாகுபடி செய்து பயன்பெற வேண்டும். தற்போது இம்முறையில் அதிகளவிலான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றனர். அரசூர் கரும்பு கோட்ட அலுவலர் தங்கமணி, கரும்பு உதவியாளர்கள் கொளஞ்சிநாதன், கனிமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

**நீர் வரத்து குறைவால் பி.ஏ.பி அணைகள் வறட்சி**

**வால்பாறை,** : வால்பாறை பகுதியில் கோடை மழை சாரல் பெய்துவரும் நிலையில், ஆறுகளில் நீர் வரத்து சற்று அதிகரித்து காணப்பட்டாலும், அணைக்கு நீர் வரத்து குறைந்தே உள்ளது.

பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்டத்தில் உள்ள மேல் நீரார் அணை, கீழ் நீரார் அணை, சோலையார் அணை, பரம்பிக்குளம் அணை, தூணகடவு அணை, பெருவாரிப்பள்ளம் அணை, ஆழியார் அணை, திருமூர்த்தி அணை ஆகிய அணைகள் உள்ளது. மின்வாரிய கட்டுப்பாட்டில் மேல்நீராறு மற்றும் காடம்பாறை அணைகள் உள்ளன. இவ்வணைகளின் மூலம் கிடைக்கும் சுமார் 31 ஆயிரம் மில்லியன் கன அடி நீரால் தமிழகத்திற்கு பாசனமும், மின்சாரமும் கிடைக்கிறது. சோலையார் மின் நிலையங்கள், சர்கார்பதி, ஆழியார் (நவமலை) மின்நிலையம், ஆழியார் புனல் மின் நிலையம், காடம்பாறை மின்நிலையங்களால் சுமார் 200 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

எனவே வால்பாறை பகுதியில் பெய்யும் மழை முக்கியத்துவம் பெற்றுள்ளது. மே மாதம் பிற்பகுதியில் பெய்யத்துவங்கும் தென்மேற்கு பருவமழையும், அதைத்தொடர்ந்து பெய்யும் வடகிழக்கு பருவமழையாலும் அணைகள் நிரம்புகின்றன. இதனால் 5 மாவட்டங்கள் நீர் வளம் பெற்று பயன்பெருகிறது. எனவே வால்பாறை பகுதியில் பெய்யும் மழை முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த வருடம் வடகிழக்கு பருவமழை வால்பாறை பகுதியில் பொய்த்துவிட்ட நிலையில், தற்போது கால தாமதமாக பெய்யும் கோடை மழை சாரல் வால்பாறையில் வெயிலை தணித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று காலை நிலவரப்படி சோலையார் அணைக்கு 168 கன அடி நீர் வரத்து உள்ளது. 170 கன அடி நீர் வெளியேறுகிறது. 160 அடி நீர்மட்டம்

உள்ள அணையில் நேற்று காலை நிலவரப்படி 2.58 அடி நீர் இருப்பு உள்ளது. அணையில் 366.55 மி.கன அடிநீர் இருப்பு உள்ளது.

பரம்பிக்குளம் அணைக்கு சோலையார் அணையில் இருந்து ¬ப்பாஸ் 1 மூலம் நீர் திறந்துவிடப்பட்டு 170 கன அடி நீர் பரம்பிக்குளம் அணைக்குச் செல்கிறது. எனவே பரம்பிக்குளம் அணைக்கு வினாடிக்கு 200 கன அடி நீர் வரத்து உள்ளது. 315 கன அடி நீர் வெளியேறுகிறது. 72 அடி நீர் மட்டம் உள்ள அணையில் 16.25 அடி நீர் உள்ளது. 6795 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது. நேற்று காலை நிலவரப்படி சோலையார் அணையில் மட்டும் 3 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகளுக்கு பொருளீட்டு கடன்**

**கோவை,** : ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் இருப்பு வைக்கும் விளைபொருள்களின் மதிப்பில் ரூ.2 லட்சம் வரை பொருளீட்டு கடன் வழங்கப்படுகிறது.

இது குறித்து கோவை வேளாண் உதவி இயக்குநர் குணசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கோவை மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நவீன முறைப்படி அமைக்கப்பட்ட குடோன்கள் உள்ளது. இவை பூச்சி, எலி தொல்லைகள் இருந்து பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் தங்களது விளை பொருள்களை இருப்பு வைக்கலாம். நல்ல விலை கிடைக்கும்போது அவற்றை இங்கு மறைமுக ஏலம் மற்றும் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யலாம்.இத்தகைய விற்பனைக்கு கமிஷன், தரகு போன்ற செலவினங்கள் பிடித்தம் செய்வதில்லை. இருப்பு வைக்கப்பட்ட விளை பொருள்களின் மதிப்பில் ரூ.2 லட்சம் வரை குறைந்த வட்டிக்கு பொருளீட்டு கடன் பெறலாம். ஒரு ஆண்டில் ஒரு மெட்ரிக் டன் அளவிலான பொ ருள்களை இங்கு விற்பனை செய்யும் விவசாயிகள் அல்லது குத்தகைதாரர் விபத்தின் காரணமாக உயிரிழந்தாலோ, நிரந்தரமாக ஊனமுற்றாலோ ரூ.50 ஆயிரம் முதல் ரூ.ஒரு லட்சம் வரை மான்யமாக வழங்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் விவசாயிகளுக்கும், உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கும் இடையில் வர்த்தக முறையினை கண்காணித்து

உதவிகள் புரிந்து நன்மை அளிக்கும் நல்ல அங்கமாக விளங்குகிறது. விவசாயிகள் பயன்படுத்தி லாபம் பெறலாம்.

இவ்வாறு குணசேகரன் தெரிவித்துள்ளார்.

**நீலகிரியில் பெய்யும் கனமழையால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

**ஈரோடு,** : நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் பெய்து வரும் கனமழையால் பவானிசாகர் அணைக்கு மோயாறு பள்ளத்தாக்கு வழியாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்துள்ளது.

105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையில் மொத்தம் 32 டிஎம்சி., தண்ணீர் சேமித்து வைக்க இயலும். கடுமையான வறட்சியாலும், நீர்பிடிப்பு பகுதிகளில் மழைப்பொழிவு குறைவாலும் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்து போனது. இதன் காரணமாக பருவமழை சீசனில் கடல் போல காட்சியளிக்கும் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 40 அடியாக குறைந்து போனதுடன், குளம் போல மாறி விட்டது. அணையின் நீர்மட்டம் குறைவால் அணையின் நீர்த்தேக்கப்பகுதியில் இத்தனை நாட்களாக மறைந்து காணப்பட்ட பழங்கால கோயில்கள், ஆங்கிலேயர் கால குதிரை பாதை போன்றவை வெளியே தெரிய ஆரம்பித்து விட்டது.

அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வரும் நிலையில் அடுத்து வரும் மே, ஜூன் மாதம் வரையிலும் குடிநீருக்கே பற்றாக்குறை ஏற்படும் அளவிற்கு நீர்இருப்பு குறைந்து போனது. இந்நிலையில் நேற்று முன்தினம் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மாவட் டம் கூடலூர், முதுமலை பகுதியில் பெய்த கனமழையால் மோயாறு ஆற்றின் வழியே தண்ணீர் பெருக்கெடுத்தது. இந்த தண்ணீர் முதுமலை, மோயாறு பள்ளத்தாக்கு போன்ற அடர்ந்த வனப்பகுதி வழியே வந்து பவானிசாகர் அணையை நேற்று வந்தடைந்தது.

இரு தினங்களுக்கு முன்பு வரை வெறும் 100 முதல் 125 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி 661 கனஅடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்கு மட்டுமே தண்ணீர் திறப்பதாலும், தற்போதைய கோடைமழையாலும் கடந்த 3 நாட்களில் அணையின் நீர்மட்டம் 2

அடி உயர்ந்து நேற்று காலை 8 மணி நிலவரப்படி 42.38 அடியாக நீர்மட்டம் உயர்ந்தது. தொடர் நீர்வரத்து காரணமாக ஒரேநாளில் ஒரு அடி நீர்மட்டம் உயர்ந்தது.

அதேசமயம் குடிநீர் தேவைக்காக ஆற்றின் வழியே 200 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்மட்டம் குறைந்து வருவது விவசாயிகளை மட்டுமின்றி, மக்களையும் கவலையடைய வைத்துள்ளது.

**மழையின்றி விளைச்சல் குறைந்தது காய்கறிகள் விலை அதிகரிப்பு**

**ஊட்டி**, :மழையின்மை காரணமாக விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளதால், அத்தியாவசிய காய்கறிகளின் விலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் அவதியடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் கடந்த இரு ஆண்டுகளாகவே எதிர்பார்த்த அளவிற்கு மழை பெய் யாமல் ஏமாற்றின. இத னால் குடிநீர் ஆதாரமாக உள்ள அணைகள், குளங் கள், ஏரிகள் தண்ணீர் வறண்டன.

மேலும் விவசாய பணி களும் கடுமையாக பாதிப்படைந்தது. போதிய மழையின்மை காரணமாக விளைச்சல் குறைந்ததால் அத்தியாவசிய காய்கறிகளின் உற்பத்தி வெகுவாக குறைந்தது.

விளைச்சல் குறைவு காரணமாக காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதி க்குள்ளாகியுள்ளனர். குறிப் பாக சமையலுக்கு முக்கிய தேவையாக உள்ள சின்ன வெங்காயம், கத்தரிகாய், வெண்டைக்காய் போன்றவற்றின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. சமவெளிப் பகுதிகளில் இருந்து நீலகிரிக்கு கொண்டு வரப்படும் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. ஊட்டியில் உள்ள உழவர் சந்தையில் கடந்த மாத துவக்கத்தில் இருந்த விலையை காட்டிலும், காய்கறிகளின் விலை தற்போது சற்று அதிகரித்துள்ளது. அதே சமயம் ஊட்டி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த மாத துவக்கத்தில் ஊட்டி உழவர் சந்தையில் தக்காளி கிலோ ஒன்றுக்கு ரூ.7 முதல் 8 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.18 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதே தக்காளி ஊட்டி மார்க்கெட்டில் ரூ.25 முதல் 30 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் ரூ.18 முதல் ரூ.22 வரை இருந்த கத்தரிகாய் தற்போது கிலோ ரூ.30க்கு வரை விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு, கேரட், முட்டைகோஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகளின் விலையும் வெகுவாக உயர்ந்துள்ளது. சமவெளி பகுதிகளிலும் மழையில்லாதால், அங்கிருந்து வரும் சின்ன வெங்காயம் ரூ.28 முதல் ரூ.30க்கும், அவரைக்காய் கிலோ ரூ.46க்கும், புடலங்காய் மற்றும் பீர்க்கங்காய் ஆகியவை ரூ.34க்கும், முருங்கைகாய் ரூ.45க்கும் உழவர் சந்தையில் விற்ப னை செய்யப்படுகிறது.

காய்கறிகளின் இந்த திடீர் விலை ஏற்றத்தால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளனர். மார்கெட்டை காட்டிலும் உழவர் சந்தையில் சற்று விலை குறைவு என்பதால் உழவர் சந்தையில் காலை முதல் மதியம் வரை காய்கறிகள் வாங்க கூட்டம் அலைமோதுகிறது.

ஊட்டி உழவர் சந்தை யில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை: (கிலோ ஒன்றுக்கு) கத்திரிக்காய் ரூ.30 முதல் 32. தக்காளி ரூ.18 முதல் 20. உருளைக்கிழங்கு ரூ.38. அவரைகாய் ரூ.46. புடலங்காய் ரூ.34. சிறிய வெங்காயம் ரூ.28 முதல் 30. கறி பீன்ஸ் ரூ.65. புஷ் பீன்ஸ் ரூ.56. டபுள்பீன்ஸ் ரூ.60. நூல்கோல் ரூ.20 முதல் 24. கேரட் ரூ.24. பீட்ரூட் ரூ.32. காலிபிளவர் ரூ.40. பூண்டு ரூ.100. ஆகும். இதே காய்கறிகள் ஊட்டி மார்கெட்டில் ரூ.10 முதல் ரூ.12 வரை அதிகமாகும். கடந்த மார்ச் முதல் வாரத்தில் இந்த காய்கறிகள் அனைத்தும் உழவர் சந்தையில் ரூ.10 முதல் 15 வரை குறைவான விலையில் விற்கப்பட்டது குறிப்பிடதக்கது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், பருவமழை இரு ஆண்டுகளாக முறையாக பெய்யாததால், நீலகிரி மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் காய்கறிகள் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டதால், விளைச்சல் குறைந்து காய்கறிகளின் வரத்து குறைந்தது.

இதனால் கடந்த மாத துவக்கத்தில் இருந்த விலையை விட தற்போது காய்கறிகளின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. வரும் வாரங்களில் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் போன்றவற்றின் விலை உயர வாய்ப்புள்ளது என்றனர்.

**விளைச்சல் குறைவால் தஞ்சையில் மாம்பழம் விலை உயர்வு**

**தஞ்சை,** : முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தை விரும்பி சாப்பிடாதவர்கள் யாரும் இருக்க முடியாது. தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று போன்றப்படும் தஞ்சையில் மாம் பழம் விற்பனைக்கு எப்போ தும் குறைவிருக்காது.

கோடையில் சுற்றுலா பயணிகள் தஞ் சைக்கு படையெடுப்பார் கள். அவர்கள் தஞ்சையில் விற்பனை செய்யப்படும் மாம்பழங்களை வாங்கிச் செல்வது வழக்கம். இதே போல் தஞ்சை நகர வாசி களும் மாம்பழங்களை ஏராளமான வாங்கி செல்வார்கள். தஞ்சைக்கு பங்கனப்பள்ளி, இமாம்பசந்த், நீலம், ஒட்டு, செந்தூரான் என்று பல ரக மாம்பழங்கள் ஆண்டுதோறும் விற்பனைக்கு வரும். ஆனால் இந்த ஆண்டு மாம்பழங்களின் வரத்து மிகவும் குறைந்துள்ளது. இதனால் மாம்பழ பிரியர்கள் மற்றும் தஞ்சைக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதற்கு காரணம் தஞ்சைக்கு எப்போதும் மாம்பழங்கள் குஜராத், கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் ஊட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் இருந்து வரும். இந்த ஆண்டு மழை குறைவு, ஆனால் வெயிலின் தாக்கம் அதிகம். எனவே பிஞ்சிலேயே வெம்பி கீழே விழுந்து விடுவதால் காய்ப்பு திறன் குறைவாக காணப்படுகிறது. இதன் காரணமாகவே மாம்பழங்களின் வரத்து குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மாம்பழ சீசன் துவக்கித்திலேயே தினமும் தஞ்சைக்கு 10 டன் முதல் 25 டன் வரை மாம்பழங்கள் விற்பனைக்கு வரும். ஆனால் இப்போது 2 டன்னுக்கும் குறைவான மாம்பழங்கள் மட்டுமே வந்துள்ளது. வரத்து குறைவால் மாம்பழங்களின் விலை அதிகமாக உள்ளது என்று வியாபாரிகள் கூறினர்.

**பனிவரகு பயிரிட்டால் பணம் அள்ளலாம்**

**பழநி**, : அதிக பணம் சம்பாதிக்க பனிவரகு பயிரிடலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பனிவரகு பயிரிட, கோ (பிவி) 5 ஏற்ற ரகமாகும். ஆடி மற்றும் புரட்டாசி பட் டம் ஏற்ற பருவமாகும். இதற் காக நிலத்தை சட்டி கலப் பை மூலம் ஆழமாக உழவு செய்ய வேண்டும். வரிசை முறை விதைப்பாக இருந் தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதையிட வேண்டும். தூவும் முறை விதைப்பாக இருந்தால் ஹெக்டேருக்கு

12.5 கிலோ விதையிட வேண்டும். 22.5 சென்டிமீட்டர் * 7.5 சென்டிமீட்டர் இடை வெளி விட்டு பயிரிட வேண் டும். ஒரு ஹெக்டேரு க்கு தேவையான விதையளவிற்கு, 600 கிராம் அசோபா ஸை அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

நிலத்தில் இடுவதாக இரு ந்தால் ஒரு ஹெக்டேருக்கு 2 கிலோ அசோபாஸை, 25 கிலோ மணல் மற்றும் 25 கிலோ தொழுஉரம் கலந்து தூவ வேண்டும். ஒரு ஹெக் டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழு உர த்தை கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழ வேண்டும். தழைச்சத்து மற் றும் சாம்பல் சத்தை 44:22 கிலோ என்ற அளவில் கல ந்து உரமிட வேண்டும். விதைத்த 18ம் நாள் களை பறிக்க வேண்டும். பின், 40ம் நாளில் மற்றொரு முறை களை எடுக்க வேண்டும். நன்கு காய்ந்து முற்றிய கதிர் களை அறுவடை செ ய்து, களத்தில் காயவைத்து அடித்து பின் தானியங்களை பிரித்து சுத் தம் செய்ய வேண்டும். அதிக பணம் சம்பாதிக்க பனிவரகு பயிரிடலாம். இதுதொடர்பான கூடு தல் தகவல்களுக்கு விவசாயி கள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

**மதுரை,** : மதுரை பெருங்குடி ரூட்செட் பயிற்சி மையத்தில் காளான் வளர்ப்பு மற்றும் காளான் விதை உற்பத்தி குறித்த 6 நாள் பயிற்சி வகுப்பு நடக்கிறது. மே முதல் வாரம் இப்பயிற்சி வகுப்பு துவங்கும். 18 முதல் 45 வயதுள்ள 8ம் வகுப்பு வரை படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

எம்பிராய்டரி மற்றும் பேப்ரிக் பெயின்ட்டிங் குறித்த 15 நாள் பயிற்சி வகுப்பும் நடக்கிறது. இன்று துவங்கும் இந்த பயிற்சியில் 18 முதல் 45 வயதுள்ள 8ம் வகுப்பு படித்தவர்கள் சேரலாம். பயிற்சி கட்டணம் இல்லை. பயிற்சி நேரத்தில் இலவச உணவு வழங்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள் பயோடேட்டாவுடன், ரூ.5 க்கான ஸ்டாம்ப் இணைத்து இயக்குநர், ரூட்செட் பயிற்சி மையம், விமான நிலைய சாலை, பெருங்குடி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

**வறட்சியிலும் விவசாயத்தை கைவிடாத விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் கைகொடுக்கிறது**

**சின்னமனூர்**, : மழையில்லாமல் வறட்சி நீடித்தாலும் விவசாயத்தை கைவிடாத விவசாயிகள் ஆழ்குழாய் அமைத்து சொட்டுநீர் பாசனத்தின் மூலமாக விவசாயம் செய்கின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் சுமார் 15 ஆயிரம் ஏக்கரில் ஆண்டுக்கு இருபோகம் நெல்சாகுபடி செய்யப்படுகிறது. மலை பிரேதசங்களில் ஏலம், காப்பி, மிளகு, பூடு என பணப்பயிர்களாக தொடர் விவசாயம் நடக்கிறது. மாவட்டம் முழுவதும் தென்னை, திராட்சை, வாழை, வெற்றிலைக்கொடிக்கால், அனைத்து விதமாக காய்கறிகள், சோளம், மக்காச்சோளம், கேப்பை, பாசிப்பயறு, கம்பு என மானாவாரி விவசாயமும் செய்ப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக சரியாக மழை பெய்யாததால் கணமாய், குளங்கள் வறண்டன. இதனால் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து விட்டது. இதனால் விவசாயத்திற்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. விவசாய நிலங்கள் பிளாட்களாக மாறி கட்டிடங்களாகவும் வணிக வளாகங்களாகவும் உருவாகின்றன. காலம் தொட்டு தொட்டு விவசாயத்தையே நம்பியுள்ள மக்களுக்கு இதை விட்டால் வேறு வழி இல்லை. இதனால் கிணறு வற்றி போனாலும் 1000 அடி முதல் 2 ஆயிரம் அடி வரையில் ஆழ்குழாய் கிணறுகள் தோண்டி விவசாயம் செய்து வருகின்றனர். தரையில் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சினால் நிறைய தண்ணீர் வீணாகும் என்பதால் நேராக சம்மந்தப்பட்ட பயிரின் வேர் பகுதிக்கு மட்டும் சென்று சேரும் வகையில் சொட்டுநீர் பாசன முறையை விவசாயிகள் பின்பற்றி வருகின்றனர். குறைந்தளவு தண்ணீரில் சிக்கன நடவடிக்கையாக சொட்டுநீர் பாசனமுறை திட்டத்தை செயல்படுத்தி பல விவசாயிகள் விவசாயத்தை காப்பாற்ற முழு முயற்சி எடுத்து வருகின்றனர்.

சொட்டுநீர் பாசனத்தால் ஒரே நேரத்தில் இரு பயிர்களை விளைவித்து எடுக்கும் முறையினையும் பின் பற்றி வருவதால் கம்பு பயிரிட்டு ஊடு பயிராக அகத்தி கீரையும் விதைக்கின்றனர். சின்ன வெங்காயம் பயிரிட்டு ஊடுபயிராக மிளகாய் என இப்படி ஒரே பாசனத்தில் இரு பயிரை விளைவித்து எடுக்கும் முயற்சியினை தேனி மாவட்ட விவசாயிகள் பின்பற்றுகின்றனர். நெல் தவிர்த்து மற்ற அனைத்துப்

பயிர்களுமே சொட்டுநீர் பாசனத்தின் கீழ் செய்யப்படுகிறது. இதனால் வறட்சியிலும் விவசாயிகள் விவசாயத்தை விடமால் மேற்கொண்டு வருகின்றனர்.

**மானாவாரிக்கேற்ற?மாற்று?பயிராக குதிரைவாலி?பயிரிடலாம் வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தகவல்**

**காரைக்குடி**, : வறட்சியை தாங்கி குறைந்த அளவு தண்ணீரில் குறுகிய கால பயிரான குதிரைவாலியை மானாவாரிக்கேற்ற மாற்றுப்பயிராக பயிரிடலாம் என செட்டிநாடு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வெப்பநிலை உயர்வு, பருவமழை பொய்த்தல் மற்றும் நீர்த்தட்டுப்பாடு போன்ற காரணங்கள் விவசாயத்தை பெரியளவில் பாதித்து வருகிறது. மாறிவரும் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள மாற்றுப்பயிர்களை பயிரிட வேண்டும். வழக்கமாக பயிரிட்டு வரும் தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களைத் தவிர்த்து, வறட்சியை தாங்கி குறைந்த அளவு தண்ணீரில், குறுகிய காலத்தில் மகசூல் தரக்கூடிய சிறுதானிய பயிரான குதிரைவாலி பயிரிடலாம் என செட்டிநாடு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது: குதிரைவாலி பயிர் நமது முன்னோர்களால் பாரம்பரியமாக பயிரிடப்பட்டு வந்தது. இப் பயிர் தற்போதுள்ள மாறிவரும் பருவநிலைக்கு மிகவும் ஏற்றவை. குதிரைவாலி கோ(கேவி) 2 என்ற ரகம் மானாவாரிக்கு மிகவும் உகந்தது. ஒரு ஏக்கர் விதைப்பதற்கு 4 கிலோ விதை தேவைப்படும். இதை வரிசைக்கு வரிசை 22.5 செமீ மற்றும் பயிருக்குப்பயிர் 10 செமீ இடைவெளியிலும் விதைக்க வேண்டும். ஏக்கருக்கு 2000 கிலோ மக்கிய தொழுவுரம் அல்லது மக்கிய தென்னை நார் கழிவு இட வேண்டும். தவிர அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபோக்டீரியா ஏக்கருக்கு 20 கிலோ தொழுவுரமாக அல்லது மணலுடன் கலந்து அடியுரமாக இடவேண்டும். இப்பயிருக்கு பொதுவாக ஏக்கருக்கு 40 கிலோ யூரியா மற்றும் 56 கிலோ சூப்பர் இடலாம். டிஏபியாக இட்டால் ஏக்கருக்கு 20 கிலோ, டிஏபி மற்றும் 30 கிலோ யூரியா இட வேண்டும்.

செம்மண் நிலத்திற்கு துத்தநாகம் 10 கிலோ, மற்றும் போரான் 1 கிலோ நுண்ணூட்டச்சத்தும், கரிசல் மண்ணில் 10 கிலோ இரும்பு சல்பேட் 150 கிலோ தொழுஉரத்துடன் கலந்து அடியுரமாக இடவேண்டும். விதைத்த 20 நாள் மற்றும் 40

நாட்களில் களை எடுக்க வேண்டும். சராசரியாக ஏக்கருக்கு 800 கிலோ அறுவடை செய்யலாம். மற்ற தானியங்களை காட்டிலும் குதிரைவாலியில் நுண்ணூட்டச்சத்து அதிகம். நோய்கள் பெரியளவில் மகசூல் இழப்பை தருவதில்லை. அதனால் மானாவாரியில் குதிரைவாலியை பயிரிட்டு குறைந்த நாளில் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பருவமழை குறையும் என மதிப்பீடு வேளாண்துறை சார்ந்த நிறுவன பங்கு விலை குறைய வாய்ப்பு**



எல் நினோ எனப்படும் வானிலை மாற்றத்தால் நடப்பு ஆண்டில் பருவமழை சராசரி அளவிற்கும் குறைவாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் முன்னறிவிப்பு செய்துள்ளது. இந்த மதிப்பீடு சரியாக இருக்கும் நிலையில் உரம், பூச்சிக் கொல்லி, டிராக்டர் தயாரிப்பு உள்ளிட்ட வேளாண்துறை சார்ந்த நிறுவனங்களின் பங்கு விலை குறைய வாய்ப்புள்ளது.

**வேளாண் ரசாயன பொருள்கள்**

பிரபுதாஸ் லில்லாடர் நிறுவனத்தின் ஆய்வாளர் பல்விந்தர் சிங் இது குறித்து கூறுகையில், ‘‘பருவமழை குறைவதால் வேளாண் ரசாயன பொருள்கள் விற்பனை

குறையும் என்பதற்கு கடந்த கால வரலாறுகள் சான்றாக அமையவில்லை. எனினும், முதலீட்டாளர்கள் மனதில் இது தாக்கத்தை ஏற்படுத்தும்'' என்று தெரிவித்தார்.

வேளாண்துறை உற்பத்தி குறைந்து பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதால் டிராக்டர், பயணிகள் மற்றும் வர்த்தக வாகனங்கள் விற்பனை குறையும். அதேசமயம், வேளாண் துறையில் சொட்டு நீர் பாசன சேவையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு வளமான வர்த்தக வாய்ப்பு உருவாகும். அனைத்து பணப் பயிர்களுக்கும் சொட்டு நீர்ப் பாசனத்தை பயன்படுத்துவதை சட்டமாக்க மகாராஷ்டிரா மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது 2015–ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு உயர்வும் இத்துறை நிறுவனங்களுக்கு சாதகமான அம்சமாகும். எனவே, இத்துறையை சேர்ந்த ஜெயின் இர்ரிகேஷன் நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் லாபம் 300 சதவீதம் அதிகரித்துள்ளது.

**பணவீக்கம்**


பருவமழை குறைவதால் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டு உணவு பொருள்கள் விலை உயரும். எனவே, சில்லறை விலை பணவீக்கம் 8 முதல் 10 சதவீதமாக உயர வாய்ப்புள்ளது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். நடப்பு 2014–15–ஆம் நிதி ஆண்டில் இந்த பணவீக்கத்தை 6 சதவீதமாக குறைக்க ரிசர்வ் வங்கி இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. எனவே, ரிசர்வ் வங்கி குறைந்தபட்சம் இன்னும் ஓர் ஆண்டு வரை முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்க வாய்ப்பில்லை என்றும், கடனிற்கான வட்டி விகிதம் தொடர்ந்து அதிகமாக இருக்கும் என்றும் நொமுரா இந்தியா நிறுவனத்தின் பொருளியல் நிபுணர் சோனல் வர்மா தெரிவித்துள்ளார். இதன் காரணமாக வங்கி, ரியல் எஸ்டேட் துறை நிறுவனங்களின் பங்கு விலை குறைய வாய்ப்புள்ளது. பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பே இந்த துறைகளைச் சேர்ந்த பல நிறுவனங்களின் பங்கு விலை மிகவும் உயர்ந்துள்ளது. மே 16–ந் தேதி வரை இத்துறை நிறுவனங்களின் பங்கு விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. எனவே, இந்த துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகளை தற்போதுள்ள நிலையில் விற்பனை செய்து விட்டு வெளியேற

வேண்டாம் எனவும், அதேசமயம் இந்நிறுவனங்களின் பங்குகளில் மூலதனத்தை அதிகரிக்க கூடாது என்றும் பங்கு வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

**ஐ.டி. துறை**

பருவமழை குறித்த அச்சப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் மருந்து மற்றும் ஐ.டி. துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டு வருவதால் ஐ.டி. துறையைச் சேர்ந்த டி.சி.எஸ். மற்றும் இன்ஃபோசிஸ் ஆகிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யலாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எல்–நினோ தாக்கம் ஏற்பட்டால் பருப்பு, வெங்காயம் உற்பத்தி குறையும்**



**புதுடெல்லி,**

நடப்பு ஆண்டில், எல் நினோ தாக்கம் ஏற்பட்டால் பருப்பு மற்றும் வெங்காயம் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளதாக அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

எல் நினோ பருவநிலை மாற்றத்தால் பசிபிக் பெருங்கடல் சார்ந்த சில பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்கிறது. பொதுவாக இந்த எல் நினோ பாதிப்புகளால் இந்தியாவில் பருவமழை குறைய வாய்ப்புள்ளது. நம் நாட்டில் 4 முதல் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை எல் நினோ பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. எல் நினோ தாக்கம் ஏற்படும் பட்சத்தில் உற்பத்தி குறைவு, விலை உயர்வு, தனிநபர்

நுகர்வு பற்றாக்குறை ஆகிய இடர்பாடுகள் தோன்றும். மேலும் இறக்குமதியை அதிகம் சார்ந்து இருக்க வேண்டிய சூழல் ஏற்படும்.

மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம், கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் பருப்பு உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. மொத்த பருப்பு உற்பத்தியில் இம்மாநிலங்களின் பங்களிப்பு 80 சதவீதமாக உள்ளது. பருவமழை சராசரி அளவைக் காட்டிலும் குறைவாக இருந்தால் உற்பத்தி கடுமையாக பாதிக்கும். இதன் தொடர்ச்சியாக பருப்பு வகைகளின் விலையும் அதிகரிக்கும்.

நம்நாட்டில் தற்போது ஆண்டுக்கு சுமார் 1.80 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. 2016–ஆம் ஆண்டுக்குள் பருப்பு உற்பத்தி 2.10 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம் அடுத்த சில ஆண்டுகளில் நுகர்வு 2.30 கோடி டன்னாக உயரும் என தெரிகிறது. சப்ளையை காட்டிலும் தேவைப்பாடு அதிகரிக்கும் என்பதால் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே சப்ளையை அதிகரிக்கும் வகையில் முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

**இந்திய அல்போன்சா மாம்பழங்களை இறக்குமதி செய்ய மே 1 வரை தற்காலிக தடை விதித்தது ஐரோப்பிய யூனியன்**



**லண்டன்,**

பழங்களின் ராஜா என்று வர்ணிக்கப்படும் இந்திய அல்போன்சா மாம்பழங்கள்

மற்றும் நன்கு காய்கறிகள் வகைகளையும் மே 1ஆம் தேதிவரை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய ஐரோப்பிய யூனியன் தற்காலிக தடைவிதித்துள்ளது. இந்தியாவில் இருந்து அல்போன்சா உள்ளிட்ட பல்வேறு உயர்ரக மாம்பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதைப்போல கத்தரிக்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட கணிசமான அளவு மாம்பழம் மற்றும் காய்கறிகள், பூச்சிகள் மற்றும் புழுக்கள் அரித்து அழுகி காணப்பட்டன. இந்த பூச்சிகளால் அந்நாடுகளின் விவசாயம் மற்றும் உற்பத்தி பாதிக்கப்படும் என ஐரோப்பிய கூட்டமைப்பின் சுகாதாரத்துக்கான தரக்கட்டுப்பாட்டுக்குழு அறிவித்தது. இதைத்தொடர்ந்து, இந்தியாவில் இருந்து அனுப்பப்படும் அல்போன்சா மாம்பழங்கள் மற்றும் கத்தரிக்காய், பாகற்காய், புடலங்காய், சேம்புக்கிழங்கு ஆகியவற்றுக்கு ஐரோப்பிய நாடுகள் மே 1ந்தேதி முதல் தற்காலிக தடை விதித்துள்ளன. எனினும் இந்த தடை, அடுத்த ஆண்டு டிசம்பர் 31ந்தேதிக்கு முன் மறுபரிசீலனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**திருப்பூர் மார்க்கெட்டில் ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூ.100–க்கு விற்பனை**



**திருப்பூர்,**

திருப்பூர் மார்க்கெட்டுக்கு பல்லடம், பொங்கலூர், காங்கயம் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து பச்சை மிளகாய் விற்பனைக்கு வருகிறது. தற்போது மழை இல்லாததாலும், கிணறுகளில் நீர் வற்றி விட்டதாலும் விவசாயம் கடுமையாக

பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். பச்சை மிளகாய் வரத்து இல்லாததால் ஒட்டன்சத்திரத்தில் இருந்து மிக குறைந்த அளவு பச்சை மிளகாய் விற்பனைக்கு வந்துள்ளது. இதனால் ஒரு கிலோ பச்சை மிளகாய் விலை ரூ.100 ஆக உயர்ந்து விட்டது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறும்போது, உள்ளூரில் பச்சை மிளகாய் உற்பத்தி இல்லாததால் வெளியூரை தேடிச் சென்று வாங்கி வந்துள்ளோம். ஒட்டன்சத்திரம் பகுதியிலும் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால் பச்சை மிளகாய் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. இதனால் 50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை பச்சை மிளகாய் ரூ.4 ஆயிரத்து 500 கொடுத்து வாங்கி வந்துள்ளோம். லாரி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்கு கூலி, மார்க்கெட் சுங்கம் என்று கணக்கு போட்டு பார்த்தால் ஒரு கிலோ ரூ.100–க்கு விற்றாலும் கூட லாபம் கிடைக்காது என்றனர்.

**மீன் பிடிக்க தடை எதிரொலி: திருப்பூரில் வளர்ப்பு மீன் வரத்து அதிகரிப்பு**



**திருப்பூர்,**

திருப்பூர் மீன் மார்க்கெட்டுக்கு தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய 4 மாநிலங்களில் இருந்து மீன்கள் வந்து கொண்டிருந்த நிலையில் தற்போது தமிழகம், ஆந்திராவில் மீன் பிடிக்க 45 நாட்கள் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனால் கேரளா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து மட்டுமே மீன்கள் விற்பனைக்கு வருகிறது. வரத்து குறைவு காரணமாக வாராவாரம் மீன்களின் விலை

ஏறிக்கொண்டே இருக்கிறது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் அனைத்து மீன்களின் விலையும் கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரை உயர்ந்து விட்டது.

கடந்த வாரம் ரூ.650–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வஞ்ரம் மீன் நேற்று ரூ.750–க்கும், ரூ.350–க்கு விற்கப்பட்ட வில மீன் ரூ.380–க்கும், ரூ.300–க்கு விற்கப்பட்ட ஊழி ரூ.330–க்கும், ரூ.550–க்கு விற்கப்பட்ட வாவல் ரூ.600–க்கும் விற்பனை செய்யப் பட்டது. கடல் மீன் வரத்து குறைந்து விட்டதால் ஆந்திரா மற்றும் கேரளாவில் இருந்து வளர்ப்பு மீன்களான கட்லா, ரோகு, மிருகால் ஆகிய ரக மீன்கள் அதிக அளவில் விற்பனைக்கு வருகின்றன. கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.40 வரை அதி கரித்து இருந்தது.

**வடகாடு பகுதியில் ஏற்றுமதி ரக வெள்ளரி சாகுபடி பணிகள் தீவிரம்**



**வடகாடு,**

வடகாடு பகுதியில் ஏற்றுமதி ரக வெள்ளரி சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. மற்ற சாகுபடியில் கைவிட்ட நிலையில் வெள்ளரி சாகுபடியில் வருவாய் கிடைப்பதால் அச்சாகு டியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயம் பாதிப்பு

புதுக்கோட்டை மாவட் டத்தில் வடகாடு, மாங்காடு, அணவயல், கீழாத்தூர், புள்ளான்விடுதி, கொத்த மங்கலம், கீரமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் நெல்,

வாழை, கரும்பு, சோளம், கடலை ஆகிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டு வந்தன.

கடந்த இரண்டு ஆண்டு களில் போதியளவு பருவமழை பெய்யாததை அடுத்து குளங்கள், ஏரிகள் வறண்டு கிடக்கின்றன. மேலும் மும்முனை மின் சாரமும் குறைந்த அளவே வழங்கப்படுகிறது.

இதனால் நெல், வாழை, சோளம், கடலை ஆகிய பயிர்களுக்கு போதியளவு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர்கள் கருகியதால், விவசாயிகள் நஷ்டத்திற்கு உள்ளாகினர்.

மேலும் விவசாயிகள், ஆழ்குழாய் கிணறுகள் மூலம் கிடைக்கும் குறைந்த அளவு தண்ணீரை வைத்துக் கொண்டு குறுகிய கால சாகுபடி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

வெள்ளரி சாகுபடி

இந்த நிலையில் வடகாடு பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் தற்போது 3 மாத கால சாகுபடியான ஏற்றுமதி ரக கொடி வெள்ளரி சாகுபடியில் ஈடுபட்டுள் ளார்கள். அமெரி க்கா, ஆஸ்திரேலியா, நெதர் லாந்து போன்ற நாடுகளில் அதிகளவில் கொடி வெள்ளரியை இணை உணவாக பயன்படுத்தப்படு வதாக கூறப்படுகிறது. இதனால் இந்தியாவில் இருந்து அதிகளவில் கொடி வெள்ளரி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் விளையும் இவ்வகை வெள்ளரிக்கு, வெள்ளரியை இணை உணவாக பயன்படுத்தும் நாடுகளில் கடும் கிராக்கி உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதனால் சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், பெங்களூர் ஆகிய ஊர்களில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களை சேர்ந்தவர்கள், வடகாடு பகுதியில் வந்து முகாமிட்டும், இடைத் தரகர்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விதை, உரம், முன்பணம் தந்து, அப்பகுதியில் விளையும் வெள்ளரியை அப்பகுதிக்கே வந்து வாங்கிச் செல்கின்றார்கள்.

4 ரகங்களாக விலை நிர்ணயம்

இப்பகுதியில் விளையும் கொடி வெள்ளரியை நான்கு ரகமாக பிரித்து விலை நிர்ணயம் செய்துள்ளார்கள். இதில் நாம் உண்ணும் வெள்ளரியை போல பெரியதாக வளர விடாமல் சுண்டு விரல் அளவுக்கு எடுத்தால் அது முதல் ரகம். இதைவிட பெரிதாக செல்ல செல்ல 2, 3, 4 என்று ரகம் பிரித்து விலையை நிர்ணயித்துள்ளனர்.

முதல் ரகம் 21 ரூபாய்க்கும், 2-வது ரகம் 11 ரூபாய்க்கும், 3-வது ரகம் 6 ரூபாய், 4-வது ரகம் 1 ரூபாய் வீதம் விலை நிர்ணயித்து விவசாயிகளிடம் இருந்தும், இடைத் தரகர்கள் மூலமாகவும் ஏற்றுமதி நிறுவனங்கள் வாங்கிச் சென்று மதிப்பு கூட்டப் பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார்கள்.

இந்த வெள்ளரி பயிரிடுவதன் மூலம் உரம், கம்பு, கம்பி, சணல் வேலை ஆட்களின் கூலி என்று அனைத்து செலவுகளும் போக விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் ரூ.10 ஆயிரம் கிடைக்கும் என்பதால் வெள்ளரி சாகுபடியில் விவ சாயிகள் மும்முரம் காட்டி வருகின்றார்கள்.

விவசாயிகளுக்கு ஆறுதல்

பெரும்பாலும் மார்கழி மற்றும் ஆடி மாதங்களில் மட்டும் வெள்ளரி பயிரிடப் பட்டு வந்தது. தற்போது, மற்ற சாகுபடியில் தொடர் நஷ்டத்தை சந்தித்து வந்த விவசாயிகள், வெள்ளரி சாகுபடி மூலம் தங்கள் வறு மையை போக்கிக்கொள்ள சித்திரை மாதத்திலும் வெள் ளரி சாகுபடியில் ஈடுபட் டுள்ளார்கள்.

மற்ற பயிர்களை சாகுபடி செய்து தொடர்ந்து நஷ்டம் அடைந்து வந்த விவசாயிகளுக்கு, ஆறுதல் அளிக்கும் வகையில் வருவாய் ஈட்டித் தருகிறது இந்த ஏற்றுமதி ரக கொடி வெள்ளரி என்றால் அது மிகையாகாது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இந்திய மாம்பழத்துக்கு ஐரோப்பிய யூனியன் தடை



இந்தியாவிலிருந்து அல்போன்ஸா மாம்பழம் இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ளது. இது தவிர பாகற்காய், புடலங்காய், நீல கத்தரிக்காய், சேப்பங்கிழங்கு உள்ளிட்ட நான்கு காய்கறிகள் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை மே 1-ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பில் 28 நாடுகள் உள்ளன. இதனால் இந்த கூட்டமைப்பில் உள்ள 28 நாடுகளுக்கும் அல்போன்ஸா மாம்பழம் மற்றும் 4 காய்கறிகளை இந்தியா ஏற்றுமதி செய்ய முடியாது.

2013-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 207 பழங்கள் மற்றும் காய்கறிகள் பெட்டியிலிருந்து பழ ஈக்கள் இருந்ததும் பூச்சிக் கொல்லி மருந்து பயன்படுத்தப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு அந்த நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள், வர்த்தகர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து இந்த நாடுகளைச் சேர்ந்த நிலைக்குழு அல்போன்ஸா மாம்பழம் மற்றும் நான்கு காய்கறிகள் இறக்குமதிக்கு தாற்காலிக தடை

விதித்துள்ளது. இந்தியாவிலிருந்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதி யாகும் பழங்கள் மற்றும் காய்கறி களில் தடை விதிக்கப்பட்ட அல்போன்ஸா மற்றும் நான்கு காய்கறிகளின் பங்கு 5 சதவீதமாகும்.

பிரிட்டனின் சுற்றுச்சூழல், உணவு மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான துறை இத்தகைய தடையை நியாயப் படுத்தியுள்ளது. இத்தகைய பழங்கள் மற்றும் காய்கறிகளில் பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகள் மிகுந்த கேடு விளைவிப்பவை. இவற்றை அனுமதித்தால் தங்கள் நாட்டில் சாகுபடியாகும் 32 கோடி பவுண்ட் காய்கறி விவசாயம் குறிப்பாக தக்காளி மற்றும் வெள்ளரி சாகுபடி பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து ஆண்டு தோறும் 1.6 கோடி மாம்பழங்களை பிரிட்டன் இறக்குமதி செய்கிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 60 லட்சம் பவுண்ட் வருமானம் கிடைக்கிறது.

இந்த தடையை விலக்குவது குறித்து டிசம்பர் 31, 2015-க்கு முன்பாக மறு பரிசீலனை செய்யப்படும். இந்தியாவில் இப்போதுதான் மாம்பழ சீசன் ஆரம்பமாகியுள்ளது. ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள தடையால் பல கோடி ரூபாய் ஏற்றுமதி வருமானம் இழப்பு ஏற்படும் என்று ஏற்றுமதியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியனின் முட்டாள்தனமான நடவடிக்கை இது என்று இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டன் எம்.பி கெய்த் வாஸ் குறிப்பிட்டுள்ளார். இந்தியா விலிருந்து பல நூறாண்டுகளாக மாம்பழங்கள் இறக்குமதி செய்யப் படுகின்றன. உரிய வகையில் கலந்தாலோசிக்காமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தான் கருதுவதாக அவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக ஐரோப்பிய யூனியன் கமிஷனின் தலைவருக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை உறுதியுடன் கடைப்பிடிக்குமாறும், இந்த விஷயத்தில் இந்தியாவையும் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.